

# ஸத் ஸம்ப்ரதாயம்

**श्रीवल्लभापयोधरसंलिप्यालेपरञ्जितोरस्कम्**
**वन्दे गजेन्द्रवदनं बालसहस्रांशुकोटिसच्छायम् ११**
**ஶ்ரீவல்லபா4பயோத4ரஸம்'லிப்பாலேபரஞ்ஜிதோரஸ்கம்**
**வந்தே3 க3ஜேந்த்3ரவத3னம்' பா3லஸஹஸ்ராம்'ஶுகோடிஸச்சா2யம் 11**

ஶ்ரீ வல்லபாதேவியின் மார்பகத்தின் மேலிட்ட நறுமணப்பூச்சு அணைத்த போது, தன் மார்பில் ஒட்ட அதனால் சிவந்து அழகான மார்புள்ளவர், கோடி இளஞ்சூர்யர்களுக்கு கொப்பான சிவந்த மேனிவண்ணம் கொண்டவர். அந்த யானை முகமுள்ளவரை வணங்குகிறேன். (பரசுராமகல்ப ஸூத்திரம் உரை )



## அருள் மொழிகள்

**மனிதனுக்கு, தான் சிறியதொரு நற்காரியம் செய்தாலும்கூட "நான் செய்தேன்" என்று அஹங்காரம் வரும். அந்த அஹங்காரம் நிறைய தவறுகளுக்குக் காரணமாக அமைந்துவிடும். "நான் தவறு செய்தால் என்னை யார் கேட்பார்கள்? எனக்கு எல்லாம் தெரியும், எனக்கு எது இஷ்டமோ நான் அதைச் செய்வேன்" என்கிற ஒரு மனோபாவத்தை அஹங்காரம் ஏற்படுத்துகிறது.**

—ஜகத்குரு சங்கராசார்யர் ஶ்ரீ பாரதீ தீர்த்த மஹா ஸ்வாமிகள்

## நீதிசதகம்

(மஹாகவி பர்த்ருஹரி)

वहति भुवनश्रेणीं शेषः फणापलक स्थितां कमठपतिना मद्ये पृष्ठं सदा स चधार्यते ।
तं अपि कुरुते क्रोडा अधीनं पयोधिः अनादरात् अहह । महतां निस्सीमानः चरित्र विभूतयः

வஹதி பு4வனஶ்ரேணீம்' ஶேஷ: ப2ணாபலக ஸ்தி2தாம்' கமட2பதினா மத்3யே ப்ரு'ஷ்ட2ம்' ஸதா3 ஸ சதா4ர்யதே .
தம்' அபி குருதே க்ரோடா3 அதீ4னம்' பயோதி4: அநாத3ராத் அஹஹ . மஹதாம்' நிஸ்ஸீமான: சரித்ர விபூ4தய:

ஆதிசேஷன் தட்டையான குடைபோன்ற தனது சிரஸில் பூமித்தொகுப்புகளை சுமக்கிறான். ஆமையரசன் தனது முதுகின் மத்தியில் ஊன்றியிருக்கும் (மந்தர) மலையைச் சுமக்கிறது. அந்த ஆமையும் அது சுமக்கும் பாரத்தையும் ஸமுத்ரம் மிக லாவகமாகத் தாங்குகிறது. மனோபலமுள்ள உத்தமர்களின் எல்லையில்லாத செயலாற்றல்கள் தான் (சக்திகள்) என்னே! வியக்கத்தக்கது.

(மானசௌர்ய பத்ததி: (மானமுள்ளோர் இயல்பு)



## விதுர நீதி

क्षमा गुणो ह्यशक्तानां शक्तानां भूषणं क्षमा ।
क्षमा वशीकृतिलों के क्षमया किं न साध्यते ॥

க்ஷமா கு³ணோ ஹ்யஶக்தானாம்' ஶக்தானாம்' பூ⁴ஷணம்' க்ஷமா |
க்ஷமா வஶீக்ரு'திலோம்' கே க்ஷமயா கிம்' ந ஸாத்⁴யதே ||

சக்தியில்லாதவர்களுக்கு பொறுமை குணமாகிறது. சக்தியுள்ளவர்களுக்கு பொறுமை அலங்காரமாகிறது. பொறுமையால் உலகத்தை வசப்படுத்தலாம். பொறுமையால் எதையும் சாதிக்க முடியும்.



शान्तिखड्गः करे यस्य किं करिष्यति दुर्जनः ।
अतृणे पतितो वह्निः स्वयमेवोपशाम्यति ॥

ஶாந்திக²ங்க³: கரே யஸ்ய கிம்' கரிஷ்யதி து³ர்ஜன: |
அத்ரு'ணே பதிதோ வஹ்னி: ஸ்வயமேவோபஶாம்யதி ||

பொறுமையாகிற கத்தி எவனது கையில் இருக்கிறதோ அவனை கெட்ட மனிதன் என்ன செய்ய முடியும்? கூளமில்லாத இடத்தில் மணலில் விழுந்த நெருப்பானது தானே அணைந்து விடுகிறது.

द्वाविमौ ग्रसते भूमिः सर्पो बिलशयानिव ।
राजानं चाविरोद्धारं ब्राह्मणं चाप्रवासिनम् ॥

த்³வாவிமௌ க்³ரஸதே பூ⁴மி: ஸர்போ பி³லஶயானிவ |
ராஜானம்' சாவிரோத்³தா⁴ரம்' ப்³ராஹ்மணம்' சாப்ரவாஸினம் ||

எந்த ஒரு அரசன் சத்ருவை அடக்கவில்லையோ, எந்த ஒரு பிறாமணன் தீர்த்தம் க்ஷேத்திரம் இவைகளுக்குச் செல்லவில்லையோ, இவ்விருவர்களையும் பூமியானது வளையில் இருக்கும் எலிகளை பாம்பு விழுங்குவது போல் விழுங்கி விடுகிறது. (அதாவது கீர்த்தி அற்றவர்களாக ஆகி அவர்களின் குலமும் மங்கி விடுகிறதென்பது கருத்து.)

(தொடரும்.....)




# ஆசார்யாளின் உபதேசங்கள்

**(தக்ஷிணாம்னாய சிருங்கேரி ஸ்ரீ சாரதா பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ மஹாஸந்நிதானம் ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாசஸ்வாமிகள் அருளியது)**

## நமது குருநாதர்

சாக்ஷாத் ஸ்ரீ பரமேச்வரரின் அவதாரமான ஸ்ரீ சங்கரபகவத்பாதர் ஸநாதன தர்மத்தை உய்விக்கும் பொருட்டு மூன்று காரியங்களைச் செய்தார். முதலாவது 'பிரஸ்தானத்ரயம்' எனப்படும் பிரஹ்ம சூத்திரங்கள், உபநிஷத்துக்கள் மற்றும் பகவத்கீதை ஆகிய இம்மூன்று கிரந்தங்களுக்கும் பாஷ்யம் (விரிவுரை) எழுதியது. இரண்டாவது, பாரத தேசம் முழுவதும் யாத்திரை செய்து தவறான வெவ்வேறு கருத்துக்களைப் பின்பற்றி வந்த பண்டிதர்களை வாதங்களில் வென்று நல்வழிப்படுத்தியது. மூன்றாவது, மிக முக்கியமானதுமான காரியம். ஸநாதன தர்மம் நிலைத்து நிற்கவேண்டி நான்கு திசைகளிலும் நான்கு ஆம்னாய பீடங்களை ஸ்தாபித்தது. ஸ்ரீ பகவத்பாதரின் அறிவாற்றலுக்கும் அமானுஷ்யமான தீர்க்க தரிசனத்திற்கும் இந்தச் சதுராம்னாய பீடங்களை நிறுவியதே சான்று. ஆதிசங்கரர் ஒருவர்தான் இதுவரை உலகில் அவதரித்த ஞானிகளுள் இம்மாதிரி அதிசயிக்கத்தக்க ஆற்றலும் தீர்க்கதரிசனமும் படைத்தவர் என்று நம் குருநாதர் கூறுவதுண்டு.



(ஜகத்குரு சங்கராசார்யார் மஹாஸன்னிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள்)

தென்திசையின் பீடமான சிருங்கேரிக்கும் வடதிசைப் பீடமான பத்ரிக்கும் மலைகள் சூழ்ந்த இடங்களையும், மேற்குத் திசைப் பீடமான துவாரகைக்கும் கிழக்குத் திசைப் பீடமான பூரிக்கும் கடல்களின் அருகிலும் இடங்களைத் தேர்ந்தெடுத்தார் பகவத்பாதர். பெரிய நகரங்களிலேயோ, நகரங்களுக்கு அருகாமையிலேயோ இப்பீடங்களை அவர் ஸ்தாபித்திருக்கலாம். ஆனால், அவர் அவ்வாறு செய்யவில்லை. அந்தந்த இடங்களுக்குச் சென்ற மாத்திரத்திலேயே ஜனங்கள் தங்கள் கவலைகளை மறந்து, அமைதியை எளிதாக அடைவதற்கேற்ப இந்த நான்கு இடங்களும் தேர்ந்தெடுக்கப்பட்டன. தக்ஷிணாம்னாய பீடத்திற்கு அமைதியும் அற்புத இயற்கை எழிலும் கொண்ட சிருங்கேரியையே தேர்ந்தெடுத்தார் ஸ்ரீ சங்கரர். வேதங்கள் நான்கு, திசைகள்



நான்கு, பிரம்மாவின் முகங்கள் நான்கு என்பது யாவரும் அறிந்ததே. அதற்கேற்பத்தான் நான்கு ஆம்னாய பீடங்களை நிறுவினார் ஸ்ரீ பகவத்பாதர். அதுமட்டுமல்ல, ஒவ்வொரு பீடத்துக்கும் தேவதை, க்ஷேத்ரம், தீர்த்தம், ஆசார்ய புருஷர் ஆகிய இவற்றையும் நிர்ணயம் செய்து வைத்தார். மற்றும், தம் வழி வரப் போகும் அந்தப் பீடங்களின் ஆசார்யர்களுக்கு இருக்க வேண்டிய தகுதிகளையும் வரையறுத்து அவர் தம் மடாம்னாய சாஸனத்தில் குறிப்பிட்டு இருப்பது:-

**சுசி: ஜிதேந்த்ரிய: வேதவேதாங்காதிவிசக்ஷண:**

அதாவது அப்பழுக்கற்ற குணமுடையவராகவும் இந்திரியங்களை ஜெயித்தவராகவும் வேதங்களிலும் அதன் அங்கங்களிலும் சாஸ்திரங்களிலும் பாரங்கதராகவும் இருக்க வேண்டும் என்பதே. சீரிய வித்வத்தும் ஜனங்களை ஆகர்ஷிக்கும் ஆற்றலும் இருந்தால் மட்டும் போதாது. அப்பழுக்கில்லாத குணநலன்களும் இருந்தால்தான் பீடத்தை நிர்வகிக்க முடியும். தன் இந்திரியங்களையே கட்டுப்படுத்த முடியாதவரால் எப்படி மற்றவர்களுக்கு உபதேசம் செய்ய முடியும்? "விவேகசூடாமணி"யில் இந்திரியங்களின் வழிச்செல்லும் ஜீவராசிகள் அழியவே செய்யும் என்று தெளிவாகக் கூறுகிறார் ஸ்ரீ பகவத்பாதர். அவ்வாறிருக்க பஞ்சேந்திரியங்களுக்கு ஆட்பட்டு வாழும் மனிதனால் மட்டும் எவ்வாறு கடைத்தேற முடியும்? உண்மையான குரு அறிவாளியாகவும் ஞானியாகவும் மட்டுமல்லாது தன்னை நாடி வரும் சிஷ்யர்களின் நலன்களில் அக்கறை கொள்பவராகவும் இருக்க வேண்டுமென்று வரையறுத்திருக்கிறார் ஸ்ரீ பகவத்பாதர்.





(ஜகத்குரு சங்கராசார்யார் ஸன்னிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ விதுசேகர பாரதீ மஹாஸ்வாமிகள் முடடேனஹள்ளியில் ஜூன் 2, 2022)

நம் ஆசார்யபாதர் ஜகத்குரு ஸ்ரீமத் அபிநவவித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள் ஸ்ரீ சங்கரபகவத்பாதரால் நிர்ணயிக்கப்பட்ட எல்லாத தகுதிகளையும் கொண்டவராகப் பிரகாசித்தார். நம் ஆசார்யபாதரின் சீரிய குணங்களையும் பூர்ணமான ஜிதேந்திரியத்வத்தையும் வியக்கத்தக்க அறிவாற்றலையும் சரியாக எடுத்துக்கூற எனக்கு ஆற்றலில்லை என்றுதான் எண்ணுகிறேன். (தொடரும்….)



# அக்னி ஸூக்தம்

**(ரிக் வேதத்தின் முதற்பால்)**
**விளக்கம் மட்டும் இங்கு பார்க்கப்படும்**




1. வேள்வியின் புரோகிதரும், தெய்வீகமானவனும், வேள்வியின் எஜமானனும், தேவர்களுக்கு ஆஹுதிகளை எடுத்துச் சென்று அளிப்பவனும், பெரும் செல்வத்தை உடையவனுமான அக்கினி தேவனை வழிபடுகிறேன்.

2. பண்டைய மற்றும் புதிய மகான்களால் வழிபடப்படுகின்ற அந்த அக்கினி, தேவர்களை இங்கே அழைத்து வரட்டும்.

3. அக்கினியை வழிபடுபவன் புகழைத் தருவதும், மனித குலத்தை வளர்ப்பதும், நாளுக்கு நாள்வளர்வதுமான செல்வத்தைப் பெறுகிறான்.

4. அக்கினியே, யஜ்ஞமாகச் செய்கின்ற எந்த வழிபாட்டை எல்லாபக்கங்களிலும் நீகாக்கிறாயோ, அந்த வழிபாடு தேவர்களை நிச்சயமாக அடைகிறது.

5. முதல் புரோகிதனும், யஜ்ஞத்தின் உட்பொருளை வெளிப்படுத்துபவனும், உண்மை வடிவினனும், மேலான மகிமை பொருந்தியவனுமாகிய அக்கினி தேவன் மற்ற தேவர்களுடன் இங்கே எழுந்தருள்வானாக.

6. அக்கினியே, நீ எந்த செல்வத்தைக் கொடுக்கிறாயோ, எந்த நன்மையைச் செய்கிறாயோ அது அங்கிரன் என்ற பெயருடைய உனக்கே நிச்சயமாக வந்து சேர்கிறது.

7. தோஷங்களை அழிக்கின்ற அக்கினியே உனக்கு வணக்கம். நாங்கள் உன்னை தினமும் தியானத்தினால் அணுகுகிறோம்.

8. அக்கினியே, நீ ஒளி படைத்தவன், யாகங்களின் காவலன், தொடர்ந்து உண்மையை ஒளிரச் செய்பவன், சொந்த இடத்திலேயே வளர்பவன்.
(அக்னி ஸூக்தம் முற்றும்)



# என்றும் புதியவர்

## ஜகத்குரு சங்கராசார்யார் ஸ்ரீமத் அபிநவ வித்யா தீர்த்த மஹாஸ்வாமிகள்

## 1. பகுத்தறிவு (விவேகம்)

### எது சரி, எது தவறு என்று பகுத்தறிவது விவேகம்



சிறு வயதிலேயே ஆசார்யாள் தமது கனவில் கூட எந்தத் தவறும் நிகழக் கூடாது என்பதில் தீர்மானமாக இருந்தார். இந்த விஷயத்தில் அவருடைய மனம் அவ்வளவு உறுதியாக இருந்தது. அது தொடர்பான இன்னொரு நிகழ்வை இங்கே நினைவு கூர்வோம். ஆசார்யாள் ஸந்யாஸம் மேற்கொண்ட போது அவருக்குப் பதினான்கு வயது கூடப் பூர்த்தியாகவில்லை. ஸந்யாஸம் பெற்றுக் கொண்ட இரவிலிருந்து தொடங்கித் தொடர்ந்து ஏழு இரவுகளில் சிவ பெருமான் ஆசார்யாளின் கனவில் தோன்றி யோகத்தை உபதேசித்த விதத்தை ஆசார்யாள் விவரமாகக் கூறியுள்ளார். அதில், ஒரு விஷயத்தை மட்டும் இங்கே நாம் எடுத்துக் கொள்வோம்.

**ஆசார்யாள்:** ஸந்யாஸம் தரப்பட்ட நாளன்று, இரவு படுக்கச் செல்லும் போது எனக்கு அசதியாக இருந்தது. வழக்கம் போல், கண்ணை மூடிய அடுத்த கணம், நான் தூங்கி விட்டேன். அந்த இரவில் எனக்கு வந்த கனவு எனக்கு இப்பொது கூடத் தெளிவாக ஞாபகத்தில் உள்ளது ...

**நான் :** கனவின் போது ஆசார்யாள் எந்த மாதிரி உடையில் இருந்தார்கள்?

**ஆசார்யாள் :** இப்போது நான் உடுத்திக் கொண்டிருப்பது போன்ற காவி நிற வேஷ்டியும், காவி நிற மேல் வஸ்திரமும் தான் அணிந்து கொண்டிருந்தேன். ... ஸந்யாஸம் பெற்றுக் கொள்வதற்கு இரு நாட்களுக்கு முன்னதாக இம்மாதிரி எண்ணம் வந்தது: 'கனவுகள் எனது கட்டுப்பாட்டில் இல்லை. அவற்றில் ரதேனும் தவறுகள் ஏற்பட்டாலும் அவை பாவத்தை ஏற்படுத்துவதில்லை. ஆனாலும், என் ஸந்யாஸம் எவ்வளவு சிரத்தையுடனும், உறுதியுடனும் இருக்க வேண்டுமென்றால், ஸந்யாஸத்திற்குப் பிறகு எந்த ஒரு கனவிலும் நான் என்னை இப்போதுள்ள வெள்ளை வஸ்திரம் அணிந்துகொண்டாற்போல்



பார்க்கக் கூடாது. காயத்ரி மந்திரத்தை ஜபிப்பது எனக்கு மிகவும் விருப்பமானது. ஆனாலும், பரமஹம்ஸ ஸந்யாஸிகளுக்கு காயத்ரி ஜபம் தடை செய்யப்பட்டிருப்பதால், நான் கனவுகளின் போது கூட, நாளை மறு நாளிலிருந்து, காயத்ரி ஜபம் செய்வதில் ஈடுபடக் கூடாது' என்று எண்ணினேன். ஈச்வரனின் கிருபையால் இந்நாள் வரை நான் நினைத்தவாறே எனக்கு அமைந்திருக்கிறது. ..."

சாதாரணமாகப் பதினான்கு வயதுச் சிறுவர்களுக்கு, 'இது சரி, அது தவறு' என்பதிலோ, 'இது செய்யத் தக்கது. அதைச் செய்யலாகாது' என்பதிலோ மனவுறுதி இருக்காது. அவ்வந்த நேரத்தில் தம் மனதில் தோன்றியவற்றையே சிறுவர்கள் செய்வார்கள். ஆனால், ஆசார்யாளுக்கு, அந்தச் சிறு வயதிலேயே 'இது சரி, செய்யத் தகுந்தது; அது தவறு, செய்யக் கூடாது' என்று பாகுபடுத்தும் திறன் அமைந்திருந்தது. மேலே கூறியது போல், அந்த விவேகத்தை நனவு நிலையில் மட்டுமல்லாமல், கனவிலும் காட்டினார்.

## விவேகம் -சாஸ்திரத்தில் சிரத்தை

ஆசார்யாளின் வாழ்க்கை வரலாற்றைப் படித்தால், அவருக்குச் சிறு வயதிலேயே 'இது சரி, அது தவறு' என்ற விவேகம் எப்படி ஏற்பட்டது என்பதை ஊகிக்கலாம். எதைச் செய்யலாம், எதைச் செய்யக் கூடாது என்கிற விஷயத்தில் சாஸ்திரம் தான் நமக்குப் பிரமாணம் என்பதை ஆசார்யாள் தமது உபன்யாஸங்களில் அடிக்கடி கூறுவதுண்டு. சாஸ்திரங்கள், மற்றும் அவற்றின் தாத்பர்யத்தின் விஷயத்தில் ஆசார்யாளுக்குச் சிறு வயதிலேயே மிகுந்த சிரத்தை இருந்ததாக அறிகிறோம்:

"... விளையாட்டு முடிந்த பின்பு சில சமயங்களில் பையன்கள் ஓர் இடத்தில் கூடி, பாயை விரித்து அதில் உட்கார்ந்துகொண்டு, ஒவ்வொருவரும் ஒரு கதை சொல்வதுண்டு. ஶ்ரீனிவாஸன் சொல்லும் கதைகள் எல்லாம் பாகவதம், மஹாபாரதம், நீதி சிந்தாமணி - இவைகளைத் தழுவியே இருக்கும். ஶ்ரீனிவாஸன் சொன்ன ஜடபரதர், ப்ரஹ்லாதன், ஹரிச்சந்திரன் முதலிய கதைகளை வெகுநாள் அவரது நண்பர்கள் மறக்கவில்லை. இப்போதும் தன் பால்ய ஸ்தேஹிதர்களில் யாரையாவது ஶ்ரீஸ்வாமிகள் சந்தித்தால், 'அந்த ஸாயங்காலக் கதைகள் ஞாபகத்தில் இருக்கிறதா?' என்று வேடிக்கையாகக் கேட்பது வழக்கம்.) கதை சொல்லி முடித்தவுடன் அதன் நீதியை ஒவ்வொருவரும் சொல்லவேண்டும் என்பது வழக்கம்."8

இதிலிருந்து, சாஸ்திரத்தின் விஷயத்திலும் அவை கூறும் பொதுவான நீதிகளின் விஷயத்திலும் ஆசார்யாளுக்குச் சிறு வயதில் இருந்த இந்த சிரத்தையே அவருடைய விவேகத்துக்கு அடிப்படையாக அமைந்தது என்று கூறலாம். இதை உறுதி செய்யும் வேறொரு சம்பவம் ஒன்றையும் இங்கே கூறுவோம். ஒரு சமயம், ஶ்ரீனிவாஸருக்கும் இன்னொரு பையனுக்கும் 'இறைவன் இருக்கிறானா இல்லையா' என்கிற விஷயம் பற்றி ஒரு விவாதம் நேர்ந்தது. (தொடரும் ...) மிக்க நன்றி : Centre for Brahmavidya



## நீதி மஞ்ஜரீ

### ஸ்ரீ ஞானானந்த பாரதீ ஸ்வாமிகள் இயற்றியது.

### அத்தியாயம் 1
### நல் வாழ்க்கை

ஒருவன் தன் வீட்டில் தன் மனைவியை அடித்துக் கொண்டிருந்தான். இது தெரிந்து அடுத்த வீட்டுக்காரருக்கு தடுக்க பலமில்லாமல் போனாலும், தடுத்துப் பார்ப்போமென்று அங்கே போய் "ஏன் ஐயா, அவளை அடிக்கிறீர்?" என்று கேட்டார். "என் மனைவியை அடிக்கிறதில் உமக்கு என்ன ஐயா?" என்று சொல்லி அவரையே இரண்டு அடி அடித்துவிட்டான். அதன் பேரில் அவர் "சரி, சரி, பின்னே அடியும், நான் போகிறேன்" என்று புறப்பட்டார். “என் மனைவியை அடியென்று சொல்வதற்கு நீர் யார் ஐயா?" என்று இன்னும் இரண்டு அடி கொடுத்தான் என்று ஒரு கதையுண்டு. அதுபோலாகிவிடும், நமக்கு ஸம்பந்தமில்லாத விஷயங்களில் தலையிட்டால். தலையிட சக்தியிருந்தாலும் கூட பிறர் செய்வது பாபம்தானா என்று தீர்மானமாய் தெரிந்தாலொழிய தலையிடக்கூடாது. ஒரு உபாத்யாயர் துஷ்டத்தனம் செய்த ஒரு சிஷ்யனை சிக்ஷித்துக் கொண்டிருக்கும்போது உபாத்யாயர் செய்வது ஹிம்ஸையென்று தடுக்கப்போனால் தோஷமேயாகும். ஒரு வியாதிஸ்தன் வைத்தியரிடம் சிகித்ஸைக்காகப் போயிருக்கும்போது அவர் ஏதோ சிறங்கைக் கீறிவிடும்போது அவன் வலி தாங்கமுடியாமல் அலறின ஸமயத்தில் வந்த வேறொருவர் வைத்தியரைத் தடுக்க யத்தினம் செய்வது கொஞ்சமேனும் உசிதமாகாது.



*Jagadguru Sri Abhinava Vidyatirtha Mahaswamigal and Jagadguru Sri Bharati Tirtha Mahaswamigal with Sri Jnanananda Bharati (purvashrama name : Sri Krishna Swami Aiyar) who was an ardent follower of Sringeri Mutt. He wrote many articles, experiences and life history of Jagadguru Sri Chandrashekkhara Bharati Mahaswamigal, without which we would not have known much of this great Jivanmukta.*
*- Posted by N Jambunathan Iyer, Chennai Tamil Nadu India*

தவிரவும் புண்ணிய பாபம் என்பதெல்லாம் நமக்கே தவிர மிருக பக்ஷியாதிகளுக்குக் கிடையாது. புண்ணிய பாபம் என்கிற பிரக்ஞை ஆத்மவித்துக்கே கிடையாதென்கிறபோது பகவானுக்குப் புண்ணிய பாப ஸம்பந்தமெப்படி ஏற்படும் ? புராணங்களில் பகவான் அவதாரம் எடுத்த ஸமயங்களில் ஏதேனும் கார்யம் செய்து அது நம்முடைய திருஷ்டியில் பாபமென்று தோன்றினாலும் அது பாபமாகாது என்பதை அனேகர் மறந்து பகவானையே தூஷிக்க முன்வருகிறார்கள். அவர்கள் மற்றவர்களை தூஷிப்பது ஆச்சர்யமில்லை. கிரமப்படி பார்த்தால் நல்ல பாபிகளாயிருப்பவர்களைக்கூட தூஷிப்பதற்கு நமக்கு அதிகாரமில்லையென்பதே சாஸ்திரம். அவர்களை பகவான் கவனித்துக்கொள்வாரே தவிர, நாம் அவர்களை தூஷிப்பதற்கு என்ன அவசியம்? தவிரவும் அவர்களை தூஷிக்கிறதானால் அவர்களைப்பற்றியும்



அவர்களுடைய பாபச்செயல்களைப்பற்றியும் நாம் அனுஸந்தானம் செய்தேயாகவேண்டும். இந்த அனுஸந்தானம் நம்மைத் தெரியாமல் நம்மைக் கெடுத்துவிடும். சேற்றில் கல்லை விட்டெறிந்தால் முகத்தில் தெறிக்கும் என்கிற நியாயம் இங்கேயும் உண்டு. ஆகையால் அவர்களை நிந்திக்காமல் உதாஸீன புத்தியுடன் நாம் ஒதுங்கிக்கொள்வதுதான் உத்தமம்.

மூன்று கந்தர்வர்கள் ஆகாயத்தில் பறந்து போய்க் கொண்டிருக்கையில் குனிந்து பார்த்தபோது கீழே பூமியில் ஒரு ஸர்ப்பம் உயிருடனிருக்கும் ஒரு தவளையைக் கவ்விக் கொண்டிருப்பதைக் கண்டார்கள். அவர்களில் ஒருவன், "இந்த ஸர்ப்பத்தைப் பார்! மஹாபாபி! உயிருடன் தவளையை விழுங்குகிறது!" என்றான். இவ்விதம் சொன்னவுடன் அவன் இறக்கைகள் கனத்தன. மேலே பறக்க முடியாமல் கீழே விழுந்துவிட்டான். அடுத்த கந்தர்வன் “அதன் ஆஹாரத்தை அது தின்கிறது, உனக்கென்ன?” என்று சொன்னான். உடனே அவன் இறக்கைகளும் கனத்துக் கீழே விழுந்துவிட்டான். மூன்றாவது கந்தர்வன் ஒன்றுமே சொல்லாமலிருந்து ஸ்வர்க்கம் போய்ச்சேர்ந்தானென்று ஒரு சிறு கதையுண்டு. முதல் கந்தர்வன் ஸர்ப்பம் தவளையை சாப்பிடுவது பிசகு என்று சொன்னதினால் ஸர்ப்பத்திற்கு ஆஹாரமில்லாமல் பட்டினிபோட்ட தோஷமேற்பட்டதினால் அவன் இறக்கைகள் கனத்தன.

இரண்டாவது கந்தர்வன் ஸர்ப்பம் தவளையை சாப்பிடுவது நியாயம்தானே என்று சொன்னதினால் தவளையைக் கொன்ற தோஷமேற்பட்டு அவனுடைய இறக்கைகள் கனத்தன. எவ்வித அபிப்பிராயமும் சொல்லாமல் உதாஸீனமாய் பார்த்துக் கொண்டு மாத்திரம் போனவனுக்கு எவ்வித தோஷமும் ஏற்படவில்லையானதினால் அவன் நல்ல பதவியை அடைந்தான்.

நமக்கு ஸம்பந்தப்படாத விஷயங்களில் இதேமாதிரி உதாஸீன புத்தியுடனிருந்து வந்தால் ஜகத்திலுள்ள பாபிகளால்கூட நமக்கு எவ்வித பாதகமுமேற்படாது. ஜகத்திலுள்ள பாபிகளையெல்லாம் நாம் கண்டித்துத் திருத்திவிடலாமென்கிற அஹம்பாவத்திற்கு ஈடே பகவானே "என் நிக்ரஹம் என்ன செய்யும் ?" என்று சொல்லும்போது நாம் வீணாக இதுமாதிரி காரியங்களில் தலையிடுவதினால் நம்முடைய சொந்தமான சிரேயஸ்ஸைத் தேடிக்கொள்ள அவகாசமும் சக்தியும் இல்லாமல் செய்து கொள்கிறோமே தவிர வேறு எந்தப் பிரயோஜனமும் கிடையாது. பொதுவாகவே ஆஸ்திகர்களாயிருந்தாலும் அவர்கள் நம்மிடம் வந்து "எது தர்மம் ?" என்று கேட்காமலிருக்கும் போது நாமாக அவர்களுக்கு எடுத்துச் சொல்வது நியாயமில்லையென்று இருக்கும்போது, பாபிகளிடத்தில் நாமாக தர்மப்பிரசாரம் செய்யத் தலைப்பட்டால் வீண் சிரமமேயாகும். அவர்களுடைய விரோதமும் ஏற்பட்டு நமக்கு இருந்துவருகின்ற மனச்சாந்திக்கும் கெடுதல்தான் ஏற்படும்.

(தொடரும் ...) மிக்க நன்றி : ஸ்ரீ ஞானானந்த பாரதீ க்ரந்த ப்ரகாசன ஸமிதி



# श्री शारदास्तोत्राणि

## ஶ்ரீ ஶாரதா$^3$ஸ்தோத்ராணி

**(ஶ்ரீ சிருங்ககிரி ஶ்ரீ சாரதா பீடாதிபதி ஜகத்குரு ஶ்ரீ சந்திர சேகர பாரதீ மஹாஸ்வாமிகள் இயற்றியது)**

### श्री शारदागीतम् - 3

**ஶ்ரீசாரதா கீதம் - 3**

शारदे करुणानिधे सकलानवाम्ब सदा जनान् ।
चारणादिमगीतवैभवपूरिताखिलदिक्तते ।।
ஶாரதே$^3$ கருணாநிதே$^4$ ஸகலானவாம்ப$^3$ ஸதா$^3$ ஜனான் |
சாரணாதி$^3$மகீ$^3$தவைப$^4$வபூரிதாகி$^2$லதி$^3$க்ததே ||



கருணையின் இருப்பிடமே! சாரதையே! சாரணர் முதலானவரால் புகழப் பெற்ற பெருமையால் திக்கெட்டையும் நிரப்பியவளே! மக்களனைவரையும் எப்போதும் காப்பாய்.

भर्म भूषण भूषिते वररत्न मौलि विराजिते ।
शर्म दायिनि कर्म मोचिनि निर्मलं कुरु मानसम् ॥
ப$^4$ர்ம பூ$^4$ஷண பூ$^4$ஷிதே வரரத்ன மௌலி விராஜிதே |
ஶர்ம தா$^3$யினி கர்ம மோசினி நிர்மலம்' குரு மானஸம் ||

தங்க ஆபரணங்களணிந்தவளே! சிறந்த ரத்தினங்கள் பதித்த கிரீடத்தால் அழகாக விளங்குபவளே! இதமளிப்பவளே! கருமபந்தத்திலிருந்து விடுவிப்பவளே! மனத்தை மாசற்றதாகச் செய்வாய்.

हस्त सन्धृत पुस्तकाक्षपटी सुधा घट मुद्रिके ।
कस्तवास्ति हि वर्णने चतुरो नरः खचरोऽथवा ॥
ஹஸ்த ஸந்த்$^4$ரு'த புஸ்தகாக்ஷபடீ ஸுதா$^4$ க$^4$ட முத்$^3$ரிகே |
கஸ்தவாஸ்தி ஹி வர்ணனே சதுரோ நர: க$^2$சரோ(அ)த$^2$வா ||

கைகளில் புஸ்தகம், ஜபமாலை, அமுதகலசம் மற்றும் சின்முத்திரை தாங்கியவளே! உன்னை மனிதனோ வானில் செல்கிற தேவனோ வர்ணிக்க வல்லவன் எவன் உள்ளான்?



# ஸ்ரீமத் வால்மீகி ராமாயண மாஹாத்ம்யம்

## (வால்மீகி ராமாயணத்தின் சிறப்பு)

**(ஸ்ரீ ஸ்கந்தபுராணம் உத்தரகண்டத்தில் நாரதர்-ஸநத்குமாரரிடையே நடந்த உரையாடல்)**

### அத்தியாயம் : மூன்று

### மாக மாதத்தில் இராமாயணத்தைக் கேட்பதன் பலன்; மன்னன் சுமதி-சத்தியவதியின் முற்பிறவி வரலாறு



மன்னர் கூறுகிறார் - "அண்ணலே! தங்கள் வருகையால் நான் பெற்றவனாகி விட்டேன். ஏனென்றால். மகாத்மாக்களின் வருகையால் சௌக்கியங்கள் உண்டாகின்றன. என்று, மேலோர்கள் புகழ்ந்துரைக்கிறார்கள். எவ்விடத்தில் மகான்களுக்கு அன்பு தோன்றுகிறதோ. அவ்விடத்தில் எல்லா வகைச் செல்வச் செழிப்பும் தானாகவே தோன்றிவிடுகிறது. ஆன்மப்பொலிவு, புகழ், செல்வம், புத்திரன் ஆகியவையெல்லாம் ஏற்படுகின்றன என்று அறிவாளர்கள் கூறுகிறார்கள். முனிவரே! ஐயனே! எந்த இடத்தில் சாது-மகாத்மாக்களின் பெருங்கருணை தோன்றுகிறதோ, அவ்விடத்தில் நாள்தோறும் சுக-சௌக்கியங்கள் பெருகுகின்றன என்பது நிதற்சனமான உண்மை.

பிரும்மன்! வேதவித்தகரின் திருவடியைக் கழுவிய நீரை எவனொருவன் தன் தலையில் தெளித்துக் கொள்கிறானோ, அவன் எல்லா புண்ணிய தீர்த்தங்களிலும் நீராடிய புண்ணியத்தைப் பெறுகிறான் என்பதில் சிறிதளவும் ஐயமில்லை. முற்றிலும் மன அமைதி பெற்ற மாமுனிவரே! என்னுடைய புத்திரர்கள். மனைவிகள், மற்றும் எல்லாச் செல்வங்களையும் தங்களுக்குக் காணிக்கையாக்கிவிட்டேன். நாங்கள், தங்களுக்கு எவ்வாறு சேவை செய்ய வேண்டும்? என்று எங்களுக்கு ஆணையிடுங்கள்.

இவ்வாறு கூறிமுடித்த மன்னரைப் பார்த்து, முனிவராகிய விபாண்டகர், தன் கையினால் மன்னரைத் தொட்டுக்கொண்டு (அவ்வளவு மனநெருக்கத்துடன்) பெரும் மகிழ்ச்சியுடன் பதில் கூறினார்.

முனிவர் கூறுகிறார்- மன்னனே! உன்னுடைய பேச்சு, உன் குலத்திற்கேற்ற வகையில் உயர்த்து விளங்குகிறது. பணிவோடு இருப்பவர்கள் எல்லாப்



பெருமைகளுக்கும் உரியவராகிறார்கள். நாடாள்பவனே! நான், எப்போதும் நல்வழியிலேயே செல்லும் உன் உபசரிப்பால் திருப்தி அடைந்திருக்கிறேன். உனக்கு மங்களமுண்டாகட்டும். பெருமைக்குரியவனே! நான் கேட்கப் போவதற்கு உரிய பதிலைக் கூறுவாயாக.

பகவான் ஸ்ரீஹரியை சந்தோஷப்படுத்தும் பல புராணங்கள் இருக்கின்றன. அவைகளையும் நீ படித்துப் பாராயணம் செய்ய முடியும். ஆனால், நீயோ மாக (மாசி) மாதத்தில் இராமாயணத்தில் ஆழ்ந்து லயப்பட்டிருக்கிறாய். சாந்தகுணம் படைத்த உன் மனைவியும். எப்போதும் இராமன் நினைவாகவே இருக்கிறாள். 'இது, ஏன் இப்படி?' என்பதை உள்ளபடி நீ எனக்கு உரைக்க வேண்டும்.

மன்னர் கூறுகிறார்- அண்ணலே! தாங்கள் கேட்ட கேள்விக்கு விடை கூறுகிறேன். கேளுங்கள். முனிவரே! நம் இருவரிடையே நிகழும் இந்த நிகழ்ச்சி மிகவும் வியப்பை அளிப்பதன்றோ! பெரியோரே! முற்பிறவியில், நான் மாலதி என்ற பெயருடைய ஒரு வேளாளனாக இருந்தேன். தீய வழிகளிலேயே சென்று, எல்லாப் பிராணிகளுக்கும் துன்பத்தைக் கொடுத்து வந்தேன், மகா கருமியாக இருந்தேன்! அறத்தை வெறுப்பவனாகவும், கோவில் சொத்துக்களை அபகரிப்பவனாகவும், பாதகச் செயல்கள் செய்பவர்களுடன் கூட்டுறவு வைத்துக் கொண்டும் தெய்வங்களுக்கு நிபந்தமாக அளிக்கப்பட்ட பொருள்களைக் கொண்டு வாழ்க்கை நடத்துபவனாகவும் இருந்தேன்.

பசுவதை அந்தணரைக் கொல்லுதல், திருட்டு, உயிர்ப் பிராணிகளை வதைத்தல், கடுமையான பேச்சு, பாவச் செயல்கள் புரிதல், பொதுமகளிரை நாடுதல் போன்றவைகளை நாள்தோறும் செய்து வந்தேன். வீட்டுப் பெரியோர்களின் அறிவுரைகளை உதாசீனப்படுத்தி. மேற்கண்டபடி தவறான வழிகளில் சென்ற என்னை, சிறிது காலத்திற்குப் பின்னர், உற்றார்-உறவினர்கள் கைகழுவி விட்டார்கள். அதனால், மனமுடைந்து ஒரு காட்டைச் சென்றடைந்தேன்.

தினமும் புலால் உணவைப் புசித்துக் கொண்டு வழிபோக்கர்களுக்கு இடையூறு அளித்து, தாங்க முடியாத துயரத்துடன். மக்கள் கூட்டமே இல்லாத அந்தக் காட்டில் தன்னந்தனியனாக வசித்து வந்தேன். ஒரு நாள். பசி-தாகம், களைப்பு-இளைப்பு, தூக்கம் தாங்காமல் சுழலும் கண்களுடன். மக்களே இல்லாத ஒரு காட்டில், தெய்வவசமாக வசிஷ்டரின் ஆசிரமத்தைக் கண்டேன்.

(தொடரும் .....)

ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ மஹாஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள், ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ ஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ விதுசேகர பாரதீ மஹாஸ்வாமிகள் அவர்களின் பொற்பாதங்களில் சமர்ப்பிக்கிறோம்